# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● டிசம்பர் 16, 2023

Weekly E-paper ● December 16, 2023



# புகை மண்டிக் கிடக்கிறது இந்திய நாடாளுமன்றம்!

சுப.வீரபாண்டியன்

## அந்தச் சிலை சொல்லும் கதை...!

வெற்றிச்செல்வன்

## இன்று புலி வேடம், நாளை?

தலையங்கம்

## இதுவும் ஆளுநர் வேலையா? இதுவே ஆளுநர் வேலையா?

யாழ்திலீபன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● டிசம்பர் 16, 2023 Weekly E-paper ● December 16, 2023


# புகை மண்டிக் கிடக்கிறது இந்திய நாடாளுமன்றம்!

**சுப.வீரபாண்டியன்**





*22 ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் அதே டிசம்பர் 13 இல், இந்திய நாடாளுமன்றம் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறது. அதற்கும் இதற்கும் வேறுபாடுகள் உண்டென்றாலும், இரண்டும் தாக்குதல்கள்தான்!*

*புதிய நாடாளுமன்றக் கட்டிடம். கடந்த மே 28ஆம் தேதி திறக்கப்பட்டது. மிகுந்த எழிலோடும் பாதுகாப்புகளோடும் கட்டப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். பழைய நாடாளுமன்றக் கட்டிடத்தை விட மூன்று மடங்கு பெரியதாம். ஆனால் பாதுகாப்பு ஏற்பாடுகளில் பல மடங்கு குறைவாக இருந்திருக்கிறது!*

அதனால்தான் நான்கு கட்டப் பாதுகாப்புகளைத் தாண்டி இரண்டு பேர் உள்ளேயும், நான்கு பேர் வெளியிலுமாக, ஒரு பதற்றத்தை ஏற்படுத்த முடிந்திருக்கிறது. பார்வையாளர்கள் மாடத்தில் இருந்து இரண்டு பேர் நாடாளுமன்ற அவைக்குள்ளேயே குதித்து வண்ணப் புகைக் குண்டுகளை வீசி இருக்கிறார்கள்.

அவர்கள் நாடாளுமன்றக் கட்டிடத்திற்குள் வருவதற்கு, பாஜகவின் எம்.பி பிரதாப் சிம்கா பரிந்துரைக் கடிதம் கொடுத்துள்ளார். அவர் மீது எந்த விசாரணையும் இதுவரையில் நடைபெறவில்லை. இன்றும் அவர் உறுப்பினராகத் தான் தொடர்கிறார். ஆனால் ஏன் இப்படிக் குறைபாடு ஏற்பட்டது என்று கேள்வி எழுப்பிய கனிமொழி உள்ளிட்ட 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

முதலில் அவையிலேயே இல்லாத திமுகவைச் சேர்ந்த, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் பார்த்திபனும் இடை நீக்கத்திற்கு உள்ளாகி இருக்கிறார். பிறகு அது தவறாக நடந்து விட்டது என்று கூறியிருக்கிறார்கள். போகிற போக்கைப் பார்த்தால், நாடாளுமன்ற உறுப்பினராகவே இல்லாதவரைக் கூட, அவையிலிருந்து இடை நீக்கம் செய்தாலும் செய்வார்கள்.

இது ஒரு கட்டிடத்திற்கு ஏற்பட்ட ஆபத்தில்லை. இந்தியாவுக்கே அறைகூவல் விடுத்திருக்கிற ஆபத்து. ஆனால் இது குறித்து விளக்கம் சொல்வதற்கு, பிரதமரோ, உள்துறை அமைச்சரோ அவைக்கு வரவே இல்லை.

அவைத் தலைவர், இது வெறும் வண்ணப் புகைக் குண்டுதான். அதாவது பட்டாசு மாதிரி என்பது போல விளக்கம் சொல்கிறார். அது என்ன மாதிரியான குண்டு என்பது வேறு செய்தி. எப்படி அதனை அவர்கள் அவைக்குள் எடுத்துக் கொண்டு வர அனுமதிக்கப்பட்டார்கள் என்பதுதான் முதல் கேள்வி.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த, இனி நம் முன் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அந்த வழி, வரும் நாடாளுமன்றத் தேர்தலில், ஒன்றிய அரசின் இன்றைய ஆளும் கட்சியைப் படுதோல்வி அடையச் செய்வது மட்டும்தான் ●

# அந்தச் சிலை சொல்லும் கதை...!

## வெற்றிச்செல்வன்

கடந்த 27.11.2023 அன்று, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் வி.பி. சிங் சிலையைத் திறந்து வைத்துப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், சிலையைத் திறந்து வைப்பதால் தமிழ்நாடு அரசு பெருமை கொள்கிறது என்று குறிப்பிட்டார். மண்டல் குழு பரிந்துரையை அமல்படுத்தியதற்காக இன்றுவரை நினைவுகூரப்பட்டு வருபவர் வி.பி. சிங். அதே நேரம் மண்டல் பரிந்துரைகள் அமல்படுத்தப்படுவதற்காகத் தமிழ்நாட்டின் முற்போக்கு இயக்கங்கள் எடுத்த முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை.

1978ஆம் ஆண்டு மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தபோது மண்டல் குழு அமைக்கப்பட்டது. சமூகத்திலும், கல்வியிலும் பின்தங்கியுள்ள வகுப்பினரை அடையாளம் காணும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட இக்குழு தனது அறிக்கையை 1980 இல் சமர்ப்பித்தது.





என்றாலும் ஒன்றிய அரசு அதனை உடனடியாக வெளியிடவில்லை. இதனை அடுத்து, 29.03.1981 அன்று கும்பகோணத்தில் திராவிடர் கழகம் வகுப்புரிமை மாநாட்டை நடத்தியது. இம்மாநாட்டில் மண்டல் குழுவின் அறிக்கை உடனடியாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. தொடர்ந்து கரூர், திண்டுக்கல், சாத்தூர் ஆகிய இடங்களில் இக்கோரிக்கையை வலியுறுத்தி மாநாடுகள் நடத்தப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிக்கையை வெளியிடச் செய்யும் முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு 17.11.1981 அன்று ஆசிரியர் கி. வீரமணி உறுப்பினர்களுக்குக் கடிதம் எழுதினார்.

இக்கோரிக்கையினைத் தமிழ்நாட்டிற்கு வெளியே கொண்டு செல்லும் நோக்கத்துடன், கர்நாடகத்தின் முன்னாள் முதல்வர் தேவராஜ் அர்ஸ் கலந்து கொண்ட மாநாட்டை திராவிடர் கழகம் சென்னை சைதாப்பேட்டையில் 1982ஆம் ஆண்டு நடத்தியது. இந்த மாநாட்டில் ‘மண்டல் குழு பரிந்துரைகளைக் காலதாமதமின்றிச் செயல்படுத்த வேண்டும்’ என்று கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பல்வேறு தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பின்னர் 30.04.1982 அன்று மண்டல் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்டது.

இதன் பின்னர், மண்டல் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவது குறித்து மாநில அரசுகளின் கருத்து கோரப்படும் என்ற ஒன்றிய அரசின் நிலைப்பாடு, பரிந்துரைகளை அமல்படுத்துவதைத் தாமதம் செய்யும் எண்ணமாகவே கருதப்பட்டது. இதனைத் தொடர்ந்து பரிந்துரைகளை அமல்படுத்தக் கோரும் அடுத்த கட்டப் போராட்டம் தொடங்கியது.

இதன் முதல்கட்டமாக, மண்டல் குழு பரிந்துரைகளை அமல்படுத்தக் கோரி திராவிடர் கழகம் தமிழ்நாடு முழுவதும் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கியது. சென்னை, கோவை, சேலம், திருச்சி, காஞ்சி, ஈரோடு, வேலூர், மதுரை ஆகிய நகரங்களில் பேரணிகளையும் நடத்தியது. இது தொடர்பாக குருதாஸ்பூர் (பஞ்சாப்), பாட்னா (பீகார்) ஆகிய இடங்களில் நடைபெற்ற மாநாடுகளிலும் ஆசிரியர் கி. வீரமணி கலந்து கொண்டு, மண்டல் குழு பரிந்துரைகள் குறித்த விழிப்புணர்வை அகில இந்திய அளவில் எடுத்துச் சென்றார்.

அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இடம்பெற்றுள்ள எண்ணிக்கை குறித்த புள்ளிவிவரத்துடன் 14.03.1983 அன்று சட்டப்பேரவையில் பேசிய கலைஞர் கருணாநிதி மண்டல் குழு பரிந்துரைகளின் மீதான தமிழ்நாடு அரசின் ஆதரவு குறித்து அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினார். மண்டல் குழு பரிந்துரைகளை அமல்படுத்தக்கோரி, 09.08.1984 அன்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தியின் வீட்டிற்கு அணிவகுத்துச் செல்ல முயன்றபோது திராவிடர் கழகத்தினருடன் ஆசிரியர் கி. வீரமணியும் கலந்து கொண்டு கைதானார்.

1985ஆம் ஆண்டு அண்ணல் அம்பேத்கரின் நினைவு நாளான டிசம்பர் 6 அன்று, மண்டல் குழு பரிந்துரைகளை நிறைவேற்றுவது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தில்லியில் மாபெரும் பேரணி நடைபெற்றது. இதில் மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், பீகார், ஆந்திர

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

கருஞ்சட்டைத் தமிழர்

## இன்று புலி வேடம், நாளை?

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தில்

இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சான்றுச் சட்டம் ஆகியவற்றின் பெயர்கள் இந்தியைப் போல சமஸ்கிருதத்தில் மாற்றப்பட்டது.

இந்திய தண்டனைச் சட்டத்தின் பெயர் 'பாரதிய நியாய சங்ஹீத'.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பெயர் 'பாரதிய நாகரிக் சுரக் ஷ சங்ஹீத'.

இந்திய சான்றுச் சட்டத்தின் பெயர் 'பாரதிய சக்ஷயா'.

இந்நிலையில் அரசியல் கட்சிகள், தலைவர்கள், வழக்கறிஞர்கள், சட்டத்துறையினர் என மக்களிடம் எழுந்த எதிர்ப்பலையால் இன்று அந்தச் சட்டங்களைத் திரும்பப் பெறுவதாக அறிவிக்கிறார் அமைச்சர் அமித்ஷா.

முன்பு அமித்ஷா சொன்னார் இது ஆங்கிலேயரின் சட்டம், நம் நாட்டிற்கு உரிய வகையில் திருத்தம், மாற்றம் செய்ய வேண்டும் என்று.

இன்று சொல்கிறார் இச்சட்டங்களில் பெரிதாக ஒன்றும் மாற்றம் இல்லை என்று.

அப்படியானால் ஏன் இந்தத் திருத்த மசோதா ?

ஆளும் பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ். நோக்கம் குற்றவியல் சட்டங்கள் சரியாக இருக்கிறதா, இல்லையா என்பதன்று.

அவை சமஸ்கிருதமயப் படுத்திட வேண்டும். மீண்டும் 'மனு' வைக் கொண்டு வந்து நிறுத்திட வேண்டும் என்பதுதான்.

இன்று மசோதாவைத் திரும்பப் பெறுவதாக அமித்ஷா சொல்லலாம். ஆனால் அவர்கள் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டவர்கள்.

இன்று புலி வேடம் போட்டுத் தோற்றவர்கள், நாளை நரி வேடத்தில், புறக்கடை வழியாக சமஸ்கிருதத்தைக் கொண்டு வருவார்கள்.

இதில் இருந்து மக்களும், நாடும் தப்ப வேண்டும் என்றால் ஒரே வழிதான் இருக்கிறது.

2024 பொதுத் தேர்தலில் பா.ஜ.கவைத் தோற்கடிக்க வேண்டும், தோற்கடிப்போம்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

தொடர்புக்கு
120 என்.டி. ராமாராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

தொலைபேசி: 044-2472 6408

முன் பக்கத் தொடர்ச்சி...

பிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த தலைவர்களுடன் ஆசிரியரும் பங்கேற்றார். பேரணி முடிந்த நாளன்று மாலை குடியரசுத் தலைவரைச் சந்தித்து மேற்கண்ட கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. 1986 இல் பிரதமர் ராஜீவ் காந்தியிடத்திலும் இக்கோரிக்கை நேரில் சந்தித்து வலியுறுத்தப்பட்டது.

1989ஆம் ஆண்டு மே 5ஆம் நாள், ஒன்பது ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள மண்டல் குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நிறைவேற்ற ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தை தி.மு.க. அரசு தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றியது.

மண்டல் குழு அமைக்கப்படுவதிலும், மண்டல் பரிந்துரைகள் அமலாக்கப்படுவதிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செலுத்தியவர் வே. ஆனைமுத்து. அவருடைய 'பெரியார் சம உரிமைக் கழகம்' அமைப்பின் சார்பாக மாநாடுகளையும், பேரணிகளையும் தொடர்ந்து நடத்தி இப்பொருள் குறித்த விழிப்புணர்வைப் பொதுமக்களிடம் கொண்டு சேர்த்தவர் அவர். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு குறித்த புரிதலை ஏற்படுத்த, நாடாளுமன்றத்தைச் சேர்ந்த 160 உறுப்பினர்களுக்கு "பிற்பட்டோரின் கதி என்ன?" (*Whither backward classes*) என்ற தலைப்பிலான ஆங்கில நூலை எழுதி அச்சிட்டு அஞ்சலில் அனுப்பியவர். தமிழ்நாடு மட்டும் அல்லாது, பீகார், தில்லி, மேற்கு வங்கம், அஸ்ஸாம் உள்ளிட்ட மாநிலங்களிலும் இட ஒதுக்கீட்டின் முக்கியத்துவத்தை உணர்த்திடும் பரப்புரையைத் தொடர்ந்து மேற்கொண்டவர்.

1989-இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், தேசிய முன்னணி கூட்டணியில் தி.மு.க. அரசு இடம்பெற்றது. தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் மண்டல் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கான உறுதி அளிக்கப்பட்டது.

இறுதியாக பிரதமர் வி.பி.சிங் தலைமையிலான அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒன்றிய அரசிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் 27% இட ஒதுக்கீட்டை அறிவித்தது. இதற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை 21.08.1990 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் முன்மொழிந்தபோது, "இந்திய வரலாற்றிலேயே புதியதோர் சகாப்தமாக சமூக நீதியை வழங்கிடப் புரட்சிகரமான முடிவெடுத்தவர் பிரதமர் வி.பி. சிங்" என்று குறிப்பிட்டார் அன்றைய முதலமைச்சர் கலைஞர். ●

# இதுவும் ஆளுநர் வேலையா? இதுவே ஆளுநர் வேலையா?

**யாழ்திலீபன்**

"நாம் யார் என்பதை உணரத் தொடங்கியுள்ளோம். நம்மால் உலகையே பாதுகாக்க முடியும். விரைவில் உலகையே வழி நடத்துவோம். இதற்காக வேதத்தை உலகெங்கும் பரப்பிட வேண்டும்" என்று ஆளுநர் வேலையிலிருந்து, வேதம் ஓதுகிறவர்களை பாதுகாக்கும் வேலையைச் செய்யத் தொடங்கி இருக்கிறார் ஆர்.என். ரவி. சென்னை திருவல்லிக்கேணியில் பார்ப்பனர்களால் நடத்தபட்ட "வேத சம்மேளனம்" நிகழ்வில் பங்கேற்று அவர் இவ்வாறு பேசியிருக்கிறார்.

உண்மையில் அவர்கள் யார் என்பதை உணர்ந்து உலகுக்குச் சொன்னவர் டாக்டர் அம்பேத்கர்தான்,



" இவர்கள் நாவிலே இராமனையும், கையிலே வாளையும் வைத்திருப்பார்கள். கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறான் என்பார்கள். ஆனால், விலங்கிலும் கேவலமாக மனிதனை நடத்துவார்கள். இவர்கள் கொடிய வஞ்சனையாளர்கள்" என்கிறார் அவர்.

பாரதிய ஜனதா கட்சி ஆட்சி செய்ய மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத மாநிலங்களில் எல்லாம் அக்கட்சி ஆளுநர்களை வைத்து ஆட்சி செய்து வருகிறது. அவர்களுக்குக்

கொடுக்கப்பட்ட வேலை, அரசு நிர்வாகத்தில் தலையிட்டு அரசு கொண்டுவரும் திட்டங்களைத் தடுத்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை நிலை குலையச் செய்வது என்பதுதான்.

தந்தை பெரியாரின் தீவிரமானச் சமூகநீதி சித்தாந்தத்தை கொண்டாடும் தமிழ்நாட்டில், எவ்வளவுதான் ஆளுநர் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கோப்புகளை நிறுத்திவைத்து ஆளும் திராவிட மாடல் அரசுக்கு தொந்தரவு கொடுத்தாலும் இங்கே காலூன்ற இந்துத்துவ பா.ஜ.க சித்தாந்தத்தால் காலூன்ற முடியாது.

கடவுள் படைப்புகளை உருவாக்கினார் அந்தப் படைப்புகளின் ஒவ்வொரு அங்கத்திலும் வேதங்கள் இருக்கின்றன. 1000 ஆண்டுகளுக்கு முன்பே உருவான வேதங்கள் மூலம் நித்திய அறிவைக் கொண்டு ரிஷிகள் நாட்டை வழிநடத்தி சென்று இருக்கின்றனர். நமது பாரதம் வேதங்களை தயாரிப்பாகும். வேதங்கள் தான் நம் நாட்டின் தாய் என்று பேசுகிறார் ஆளுநர்.

வேத பிராமணர்கள் வழிநடத்திய ஆட்சி நால்வர்ண அமைப்பை அடிப்படையாகக் கொண்ட ராம ராஜ்ஜியம், பார்ப்பனர்களின் ராஜ்ஜியமாக இருந்ததற்குச் சான்றாக சமபூகன் என்ற சூத்திரனின் தலை வெட்டப்பட்டதே சாட்சி என்கிறார் அம்பேத்கர்.

" ராமன் சம்பூகனுக்கு குறைவான தண்டனையை அளிக்கவில்லை அதனால் தான் வேதம் ஓதுகிற சூத்திரனின் நாக்கை அறுக்க வேண்டும் என்பது, வேதம் ஓதப்படுவதைக் கேட்கின்ற சூத்திரனின் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்பது போன்ற கடுமையான தண்டனைகளை மனுஷ்மீது விதித்திருக்கிறது" என்றும் கூறுறார் அவர்.

இப்படி இருக்கும் போது பாரதம் மட்டுமின்றி உலகின் அனைத்து மக்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என வேதங்கள் சொல்லுகின்றன என்று ஆளுநர் சொல்வது முற்றிலும் பொய். அத்துடன் ராம ராஜ்யத்தை கட்டி எழுப்புவதற்காகவே நாட்டை காவிமயமாக்கும் திட்டமும், நால்வர்ண அமைப்பு முறையை பாதுகாப்பது என்பதே அவரின் நோக்கமாக இருக்கிறது.

பார்ப்பனியத்தின் அடிப்படை கோட்பாடுகள் ஆறு. ஒன்று பல்வேறு வகுப்புகளுக்கு இடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்துவது. இரண்டு சூத்திரர் மற்றும் தீண்டத்தகாத மக்களை முழுமையாக நிராயுதபாணி மக்களாக ஆக்குதல். மூன்று சூத்திரர், தீண்ட தகாத மக்களுக்கு கல்வியை முற்றிலும் தடை செய்தல். நான்கு சூத்திரர் தீண்டத்தகாதவர்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதில் இருந்து முற்றிலும் தடை செய்தல். ஐந்து சூத்திரர், தீண்ட தகாதவர்கள் சொத்து வைத்திருப்பதைத் தடை செய்தல். ஆறு பெண்களை அடக்கி அடிமை நிலையில் வைத்திருத்தல். சமத்துவமற்ற ஏற்றத்தாழ்வு தான் பார்ப்பனியத்தின் அதிகாரப்பூர்வ கொள்கையாகும் என்றும் பதிவு செய்கிறார் அம்பேத்கர்.

நாம் வேதங்களில் இருந்து பிரிந்து விட்டோம் என்றும், பாரதம் மீண்டும் எழுந்து கொண்டிருக்கிறது என்றும், அது விழித்துக் கொள்ளத் தொடங்கியுள்ளது என்றும் சொல்லும் ஆளுநர் ஆர்.என். ரவியின் நம்பிக்கை நரேந்திர மோடியின் ஆட்சியின் மீதுதான் .

ஆரியர் என்று ஆர். எஸ். எஸ். ஆல் போற்றப்படும் ஜெர்மனியின் ஹிட்லருக்கு உலக நாடுகள் என்ன மதிப்பைத் தருகிறதோ, அதைத்தான் இவர்களுக்கும் வழங்கும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian